## பதிவு செய்தல்

உங்களை நூலகத்திற்கு மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்.

நீங்கள் நூலகத்திற்கு வருவது எங்களுக்கு மிக சந்தோஷம். நூலகம் திறந்திருக்கும் நேரம் நீங்கள் நூலகத்தில் இருக்கும் எல்லா ஊடகங்களையும் பார்வையிட அனுமதிக்கப்படுவீர்கள். குறிப்பிட்ட ஊடகங்களை நீங்கள் இரவல் பெற்று வீட்டுக்குக் கொண்டுச்செல்லலாம்.

### இரவல் பெற நிபந்தனைகள்

- ஒரு வருஷக் கட்டணத்துக்கு அதாவது Fr. . . .க்கு நீங்கள் ஆகக்கூடியது, . . . . ஊடகங்களை இரவல் பெறலாம்.

- குழந்தைகளுக்கும் 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளைஞர்களுக்கும் இரவல் இலவசம்.

- பதிவு செய்வதற்கு செல்லுபடியாகக்கூடிய அடையாள அட்டை வேண்டும். அடையாள அட்டையில் உங்கள் பெயரும் முகவரியும் படமும் இருக்கவேண்டும்.

- குழந்தைகளும் இளைஞர்களும் பதிவு செய்வதற்குப் பெற்றோரின் அல்லது சட்டரீதியான பொறுப்பாளர்களின் கையெழுத்து தேவை.

- தயவு செய்து இரவல் வாங்கிய ஊடகங்களை மிக கவனமாக பயன்படுத்துங்கள். தொலைந்த போனவற்றிற்கும் சேதப்படுத்தப்பட்டவற்றிற்கும் நூலகத்திற்கு நட்ட ஈடு கொடுக்கவேண்டும்.

### திருப்பிக்கொடுத்தல்

முத்திரையிடப்பட்ட திகதிக்குள் ஊடகங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும், அல்லது நூலகத்தில் நீடிப்பு கேட்டு முத்திரைத் திகதி மாற்றப்பட வேண்டும். இரண்டும் செய்யாமல் இருந்தால் எச்சரிக்கைக் கட்டணம் கொடுக்க வேண்டும்.

எங்கள் வினியோகங்கள் உங்களுக்குப் பிடிக்கும் என்று நினைக்கின்றோம். தயவு செய்து நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும் சங்கங்களுக்கும் எங்கள் அமைப்பைப் பற்றி தெரிவியுங்கள்.

நாம் உங்கள் வருகையை சந்தோஷத்துடன் எதிர்ப்பார்க்கின்றோம்.

## நூலகத்துக்கு வருவதற்குப் பெற்றோரின் அனுமதி

உங்கள் குழந்தை எமது நூலகத்திலிருந்து ஊடகங்களை எடுக்க விரும்புகிறது. ஆதற்கு எங்களுக்கு உங்கள் அனுமதி வேண்டும். குழந்தைகளுக்கு நூலகத்திலிருந்து ஊடகங்களை இரவல் எடுப்பது அடிப்படையாக இலவசந்தான். குழந்தை சரியான திகதிக்குள் ஊடகங்களைத் திருப்பிக்கொடுக்காமல் இருந்தால் உங்களுக்கு எச்சரிக்கைக்கடிதம் அனுப்புவதுடன் அதற்குக் எச்சரிக்கைக்கட்டணமும் உள்ளது. உங்கள் குழந்தை இரவல் செய்த ஊடகங்களைக் கவனமாக உபயோகிக்க வேண்டும். சேதப்படுத்தப்பட்டால் அதற்காக நூலகத்தினால் உங்களுக்குச் சேதத்திற்கான கட்டணம் அனுப்பி வைக்கப்படும்.

தயவு செய்து இந்த அட்டையை நிரப்பி கையெழுத்து போடுங்கள். உங்கள் குழந்தை அடுத்த தடவை நூலகத்திற்கு வரும் போது இந்த அட்டையைக் கொடுத்து விடுங்கள்.

குழந்தையின் பெயர் . . . . . . . . . . . . . . . . . . . .

வீதி . . . . . . . . . . . . . . . . . . . .

அஞ்சல் வலயச் சுட்டெண் - இடம் . . . . . . . . . . . .

தொலைபேசி எண் . . . . . . . . . . . . . . . . . . . .

மின்னஞ்சல் . . . . . . . . . . . . . . . . . . . .

நீங்கள் எங்கள் நூலகத்திற்கு வருவது எங்களுக்குச் சந்தோஷம் அளிக்கும்.

இடம், திகதி . . . . . . . . கையெழுத்து . . . . . . . .

## முன் பதிவு செய்தல்

நீங்கள் கீழ்கண்ட தலைப்பில் ஊடகங்களை (புத்தகம், சீடீ, படம் முதலிய ஊடகங்களை) முன்பதிவு செய்திருந்தீர்கள்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . ஆம் திகதி வரைக்கும் அவற்றை இங்கே வந்து பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு<br>
உங்கள் நூலகம்.